# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1990, மார்ச் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

***விலை : சதம் 60*** ***தபாற் செலவு : ரூபா 1.00***

## 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம்

[1990, மார்ச்சு மாதம் 13 ஆம் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 6/89

### நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 86 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்த உட்பிரிவின் (V) ஆம் பந்தியில் "ஒரு பொறுப்பேற்பு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு பொறுப்பேற்பு; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அந்த உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

(VI) எல்லாக் காப்புறுதி செய்தகு இடையூறுகளுக்கும் எதிராக அத்தகைய பண்டங்களை, அதனுடைய காப்புறுதி செய்யப்படக்கூடிய முழுப் பெறுமதிக்கும் மீளப் பெறப்படக் கூடிய அடிப்படையில் முகவர் நிலையத்தின் பெயரில் காப்புறுதி செய்வதற்கும் அத்துடன் நட்டம் ஏற்படும் விடயத்தில் விற்பனை வரும்படிகளைப் போன்று அதே முறையில் முகவர் நிலையத்துக்கு காப்புறுதிப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்குமான ஒரு பொறுப்பேற்பு.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது — முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்த உட்பிரிவின் (V) ஆம் பந்தியில் " ஒரு பொறுப்பேற்பு " என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு பொறுப்பேற்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அந்த உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

(VI) எல்லாக் காப்புறுதி செய்தரு இடையூறுகளுக்கும் எதிராக அத்தகைய பண்டங்களை அதன் ஏற்றுமதிவரை அதனுடைய காப்புறுதி செய்யப்படக்கூடிய முழுப் பெறுமதிக்

கும் மீளப் பெறப்படக்கூடிய அடிப்படையில் முகவர் நிலையத்தின் பெயரில் காப்புறுதி செய்வதற்கும் அத்துடன் நட்டம் ஏற்படும் விடயத்தில் விற்பனை வரும்படிகளைப் போன்று அதே முறையில் முகவர் நிலையத்திற்கு காப்புறுதிப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்குமான ஒரு பொறுப்பேற்பு".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (VI) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின் வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

(VI) எந்த ஆளால் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு நிறைவேற்றப்பட்டதோ அந்த ஆள் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டில் அடங்கி உள்ள பொறுப்பேற்பு ஒன்றாக உள்ளதும், விடயத்திற்கேற்றாற்போல், 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு அல்லது 3 ஆம் உட்பிரிவில் அல்லது 3 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டதுமான ஏதேனும் பொறுப்பேற்புடன் இணங்கியொழுகத் தவறினால் அல்லது அதனை மீறினால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவரின் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் மூன்று வருடத்திற்குக் குறையாத இருவகையிலொருவகை மறியல் தண்டனைக்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் கொடுமதியாய் உள்ள அல்லது முகவர் நிலையத்துக்கு அதன்கீழ் கொடுப்பனவு செய்யப்படக்கூடிய பணமென கூறப்பட்டுள்ள தொகைக்குக் குறையாததும் அத்துடன் அத்தொகையின் மூன்று மடங்கை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 4அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

5. நான்காம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"ஆட்கள் குழுவினாலான தவறுகள்.

(4அ) ஆட்கள் குழுவினால் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து,

(அ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒவ்வொருவரும்;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாயிருப்பின் அந்தக் குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(இ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்படாத குழுவாயிருப்பின் அத்தகைய குழுவின் உறுப்பினரான தனிநபர் ஒவ்வொருவரும்,

தவறொன்றுக்குக் குற்றம் சாட்டப்பட்டவராகக் கருதப்படல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அவரது அறிவுக்கு எட்டாது அத்தகைய தவறு செய்யப்பட்டது என அல்லது அத்தகைய தவறு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு போதுமான எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தார் என நிரூபிப்பாராயின் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலரொருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளரொருவரின் அத்தகைய தவறுக்குக் குற்றம் சாட்டப்பட்டவராகக் கருதப்படல் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் மாற்றீடு செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையங்கள்.*

5. (1) இக்கட்டளை சட்டத்தில் "அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையம்' என்பது:—

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கி ;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி ;

(இ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி ;

(ஈ) (165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ;

(உ) எந்தக் கம்பெனி அல்லது கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் 6 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ அந்த ஏதேனும் கம்பெனி அல்லது ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் எனப் பொருளாகும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தில் உள்ள எதுவும், அத்தகைய நிறுவனத்தின் தாபிப்பு, தத்துவங்கள், மற்றும் பணிகளுக்கு ஏற்பாடு செய்யும் கட்டளைச் சட்டத்தினால் அத்தகைய கடன்களைக் கொடுப்பதற்கான தத்துவம் அல்லது அத்தகைய கடன் வசதிகளை அளிப்பதற்கான தத்துவம் அத்தகைய நிறுவனத்திற்கு அளிக்கப்படாதிருப்பின், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்களை நிறைவேற்றுவதன் பிரதி பயனாக ஏதேனும் கடன் வழங்கு வசதிகளை அளிப்பதற்கு அல்லது கடனை கொடுப்பதற்கு, 1 ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கின்றதாகக் கருதப்படல் அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பிரிவைச் சேர்த்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் சேர்க்கப்படுகின்றது:—

"வர்த்தகப் பணிப்பாளரின் தத்துவங்கள்.

6. வர்த்தகப் பணிப்பாளரானவர், தேசிய பொருளாதாரத்தின் நலன் கருதி அவ்வாறு செய்வது தோதானதென அவர் கருதுகின்றவிடத்து, இச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு அல்லது குறிப்பீடு செய்யப்படாததும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் போதிய நிதி நிலையுறுதியும் வளமும் கொண்டதென அவர் கருதுவதுமான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் வெளிப்படுத்தலாம்."

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா [illegible]; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.